**ஜூலை – 26**

# TNPSC துளிகள்

- இலங்கை அதிபர் மைத்ரிபாலா சிறிசேனாவின் முன்னாள் செயலாளர் ஆஸ்டின் பெர்னான்டோ, இந்தியாவிற்கான இலங்கையின் அடுத்தத் தூதராக (High Commission of India) நியமிக்கப்பட்டுள்ளார். சித்தரங்கனி வகிஸ்வாராவினை அடுத்து இவர் பொறுப்பேற்க உள்ளார்.
- இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் சுகாதாரத் துறை திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding - MoU) கையெழுத்திட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு (Batticola) மாவட்டத்தில் 3,400 கழிப்பறைகள் கட்டப்பட உள்ளன.
- நாட்டின் பெரிய கடன் அளிக்கும் வங்கியான பாரத் ஸ்டேட் வங்கி (State Bank of India - SBI) தேசிய அளவிலான கிசான் மேளாவினை ஏற்பாடு செய்துள்ளது. கிசான் மேளா, விவசாயிகளை சென்றடையும் வகையில் நிதிநிலைக் கல்வியறிவை அளிப்பதற்கான திட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act) கீழ் குற்றங்களை மதிப்பாய்வு செய்வதற்கான குழு

- பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம் (Ministry of Corporate Affairs - MCA) நிறுவனங்கள் சட்டம், 2013ல் உள்ள தண்டனைக்குரிய விதிகளை மதிப்பாய்வு செய்வதற்கான 10 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை அமைத்துள்ளது.
- இக்குழு பெருநிறுவனங்கள் விவகார அமைச்சகத்தின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சில குற்றங்களின் குற்றவிலக்கினை ஆய்வு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சில குற்றங்கள் குற்றவிலக்கு செய்யப்பட வேண்டும் என்பதாலும் சில குற்றங்களை நிர்வாக அளவிலான நுட்பத்தில் கையாள வேண்டும் என்பதாலும் MCA ஆனது நிறுவனங்கள் சட்டம் 2013-ன் கீழ் சில குற்றங்களை மதிப்பாய்வு செய்ய முற்படுகிறது.
- இக்குழு அதன் அறிக்கையினை 30 நாட்களுக்குள் மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கும்.

## பிச் ப்ளாக் 2018 (Pitch Black 2018-PB18)

- இந்திய வான்வெளிப் படை (Indian Air Force - IAF) ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பன்னாட்டு போர் பயிற்சியான பிச் ப்ளாக்கில் முதன் முறையாக பங்கேற்கிறது.
- பிச் ப்ளாக் ஆனது ஆஸ்திரேலிய அரச வான்வெளி படையினால் (Royal Australian Air Force - RAAF) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஆஸ்திரேலியாவைத் தவிர மற்ற எட்டு நாடுகள் 100 விமானங்களுக்கும் மேலான பங்களிப்புகளுடன் பங்கேற்க உள்ளன.

- பிச் ப்ளாக் பயிற்சி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மிகப்பெரிய மூன்று வார பன்னாட்டுப் பயிற்சி ஆகும்.
- இப்பயிற்சி RAAF - ஐ சேர்ந்த தார்வின் மற்றும் டின்டாலிருந்து நடத்தப்படுகிறது.
- இப்பயிற்சி 1981-ல் ஜூன் 15-16ல் வெவ்வேறு RAAF பிரிவுகளுக்கிடையே முதன்முறையாக நடைபெற்றது.

# சர்வதேசச் செய்திகள்

## யூதர்கள் தேசச் சட்டம்

- இஸ்ரேல் பாராளுமன்றம் நெசெட் (knesset), இஸ்ரேலினை யூதர்களுக்கான தேசிய வாசஸ்தலமாக முதன்முறையாக உறுதிப்படுத்தும் சர்ச்சைக்குரிய தேச-அரசு மசோதாவினை நெசெட்டின் அரசியலமைப்பு முறை சார்ந்த அடிப்படைச் சட்டத்தில் (யூதர்கள் தேச சட்டம்) சேர்த்துள்ளது.
- மேலும் இச்சட்டம் ஜெருசலத்தினை இஸ்ரேலின் தலைநகராகவும் ஹெப்ரூ நாட்காட்டியை நாட்டின் அதிகாரப்பூர்வ நாட்காட்டியாகவும் அறிவித்துள்ளது.
- இம்மசோதாவில் உள்ள ஒரு உட்கூறு, அரபு மொழியினை அதிகாரப்பூர்வ நிலையிலிருந்து சிறப்பு மொழி (Special) என்ற நிலைக்கு தரம் இறக்குகிறது.
- தற்பொழுது, இஸ்ரேலில் உள்ள மொத்த மக்கட் தொகையில் 74.5% யூதர்கள் ஆவர். அரேபியர்கள் இஸ்ரேல் மக்கட்தொகையில் 20% உள்ளனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## GST வரி விகித குறைப்பு - 88 பொருட்கள்

- சுகாதாரத் துணிகள் (தற்பொழுது 12% வரி) மற்றும் செறிவூட்டப்பட்ட பால் (தற்பொழுது 18% வரி) ஆகியன வரிவிதிப்பிலிருந்து விலக்கு பெற்றுள்ளன.
- சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, 25 அங்குலம் வரையிலான தொலைக்காட்சிப் பெட்டிகள், தூசி அகற்றும் கருவி, வாசனை திரவியங்கள், அறவை இயந்திரங்கள், மிக்சர்ஸ், தண்ணீர் குளிர்விப்பான், லித்தியம்-அயர்ன் பேட்டரிகள் மற்றும் பெயிண்ட்ஸ் ஆகியவை 28% படிநிலையிலிருந்து 18% படிநிலைக்கு குறைக்கப்பட்ட பொருட்கள் ஆகும்.
- ரூ.1000 மதிப்புள்ள வழக்கமாக பயன்படுத்தப்படும் காலணிகளுக்கு 5% அளவில் வரி விதிக்கப்படும்.
- எண்ணெய் நிறுவனங்களுக்கான எத்தனால் எண்ணெய்க்கு முந்தைய 18% நிலையிலிருந்து 5% வரி நிலைக்கு மாற்றப்படும்.
- கைப்பைகள் மற்றும் கையினால் செய்யப்பட்ட விளக்குகள் மீதான GST வரி 12% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய GST விகிதங்கள் ஜூலை 27லிருந்து நடைமுறைக்கு வரும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மருத்துவப் பொருட்களுக்கான ட்ரோன் விநியோக முறை

- ஹைதராபாத்தின் இந்திய பொது சுகாதார நிறுவனம் (Indian Institute of Public Health Hyderabad - IIPH - H) மருத்துவப் பொருட்களுக்கான விநியோகத்திற்கு ட்ரோன் விநியோக முறையினை உருவாக்கி வருகிறது.
- IIPH-H நிறுவனம் அமெரிக்காவைச் சார்ந்த புகழ்மிக்க ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்துடன் வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட தடுப்பூசிப் பெட்டியினை (Temperature Controlled vaccine box) உருவாக்கும் செயல்முறையில் இணைந்து செயல்படுகிறது.
- இந்த டிஜிட்டல் ட்ரோன் அடிப்படையிலான மேம்பட்ட நிகழ்நேர மருத்துவ கூறுநிலை திட்டங்களை செயல்படுத்தும் அமைப்பின் (Real-Time Advanced Medical Modular Logistics system - 2 DREAM) நோக்கம், தொலைதூர பகுதிகளை சென்றடைதல் மற்றும் வெப்ப உணர்திற கலன்களை 30 நிமிடங்களில் விநியோகம் செய்தல் ஆகியன ஆகும்.

## நடத்தல் திறன் மீள்விற்கான சோதனைகள்

- தண்டு வடத்தில் ஏற்பட்ட காயத்திற்குப் பிறகு முடங்கிய சுண்டெலியின் நடத்தல் திறனை போஸ்டனின் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக மீட்டுள்ளனர்.
- இம்மீள்திறன் அதிக ஆற்றல்மிக்க சிறிய மூலக்கூறு சேர்மம் LLP 290-யினை உட்செலுத்துதல் மூலம் கண்டறியப்பட்டது.
- இம்மூலக்கூறு சேர்மம், 4 லிருந்து 5 வார சிகிச்சைக்கு பிறகு சுண்டெலியின் நடத்தல் திறனை மீட்டெடுக்கச் செய்துள்ளது.
- CLP290 என்பது ஒரு KCC 2 என்று அழைக்கப்படும் ஊக்குவிப்பு புரதம் ஆகும். இது குளோரைடுகளை நியூரான்களிலிருந்து இடம்பெயரச் செய்யும் செல் சவ்வுகளில் காணப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## டாக்ஸிபோட்ஸ்

- இந்தியா சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் விமானநிலையங்களில் பயன்படுத்தப்படும் டாக்ஸிபோட்ஸை வாங்க திட்டமிட்டுள்ளது. இது இஸ்ரேல் விண்வெளி தொழில் நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த அரை இயந்திர மனிதனின் செயல்பாடு விமான ஓட்டிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும். இது விமானம் ஓடுதளத்தின் தொடக்கப் பாதைக்கு வரும் போது மட்டுமே விமானிகள் விமான இயந்திரத்தை இயக்க ஒத்துழைக்கும். எனவே இதன் மூலம் கார்பன் வெளியேற்றமானது குறைக்கப்படும். டாக்ஸிபோட்ஸ்க்காக IAI (Israel Aerospace Industries) ஆனது குருகிராமை மையமாகக் கொண்டு செயல்படும் நிறுவனமான கேஎஸ்யூ வான்பயணவியல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக

அறிவித்துள்ளது.

- இந்திய விமான நிலையங்களில் பயன்படுத்தப்படும் இந்த டாக்ஸிபோட்ஸ்களின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவிற்கு 1.5 மில்லியன் மிச்சமாகும். 4 மில்லியன் டன்கள் அளவிலான பசுமை இல்ல வாயுக்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் இதைப் பயன்படுத்துவதன் மூலம் குறையும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அனைத்து இந்திய கால்பந்து கூட்டமைப்பு விருதுகள் 2017

- இந்தியாவில் கால்பந்து விளையாட்டை நிர்வகிக்கும் அமைப்பான அனைத்து இந்திய கால்பந்து கூட்டமைப்பு (AIFF - All India football federation) ஆனது இந்திய மற்றும் பெங்களூரு கால்பந்து சங்க அணியின் தலைவர் சுனில் சேத்திரியை 2017 ஆம் ஆண்டிற்கான AIFF விளையாட்டு வீரராக அறிவித்துள்ளது. மும்பையில் நடைபெற்ற சங்கங்களுக்கான நிர்வாகக் குழு கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.
- இக்கூட்டம் AIFF ன் தலைவர் பிரவுல் படேல் தலைமையில் நடைபெற்றது.
- 2017ஆம் ஆண்டிற்கான AIIF-ன் பெண் விளையாட்டு வீரருக்கான விருதை கமலாதேவி பெற்றார்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஜெர்மன் கிராண்ட் பிரிக்ஸ்

- ஜெர்மனியின் ஹோக்கன்ஹெய்ம்மில் நடைபெற்ற 2018 ஜெர்மன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் லூயிஸ் ஹாமில்டன் வென்றுள்ளார்.
- நான்கு முறை சாம்பியன் பட்டம் பெற்ற லூயிஸ் ஹாமில்டன், தகுதிச் சுற்றில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டபின் 14வது சுற்றில் தொடங்கி வெற்றி பெற்றுள்ளார்.
- முதன்முறையாக தரவரிசையின் முதல் 6 இடத்தில் இடம்பெறாத வீரராக இவர் வெற்றி பெற்றுள்ளார்.

## சுவிஸ் ஓபன்

- பிரான்ஸின் முன்னிலை வீரரான அலீஸ் கார்னெட் லக்ஸம்பெர்க்கின் மண்டி மின்னெல்லாவை வீழ்த்தி ஸ்விஸ் ஓபன் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். இது அவரது 6-வது வாழ்நாள் பட்டமாகும்.
- கார்னெட் உலகத் தர வரிசையில் 48-வது இடத்தில் உள்ளார். 2016-ஆம் ஆண்டு முதல் அவர் ஹாபர்ட் சர்வதேச கிரீடத்தை வென்றபோது தனது முதலாவது பட்டத்தைப் பெற்றார்.

## உலகின் இரண்டாவது பெரிய மலையில் பனிச் சறுக்கில் பங்கு பெற்ற முதல் நபர்

- பாகிஸ்தானில் உள்ள உலகின் இரண்டாவது பெரிய சிகரமான, 8611 மீட்டர் உயரம் கொண்ட K2-ல் பனிச்சறுக்கில் ஈடுபட்ட முதல் நபர் போலந்தைச் சார்ந்த அண்டிரிசக் பர்ஜுல் ஆவார்.
- K2 என்பது 'சாவேஜ் மலை' என்றும் அறியப்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய சிகரமான மவுண்ட் எவரெஸ்ட்டை விட ஏறுவதற்கு மிகக் கடினமான மலையாகும்.

- - - - - - - - - - - - - - -